සියලු ම හිමිකම් ඇවිරිණි முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 08 - 2023 (2024)
Third Term Test - Grade 08 - 2023 (2024)

# கத்தோலிக்க திருமறை

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. "என்னை தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" எனக் கூறும் பழைய ஏற்பாட்டு நூல்,

i. தொடக்க நூல் ii. விடுதலைப்பயணம் iii. இணைச்சட்டம் iv. லேவியர்

02. இவ்வுலகின் மூவொரு இறைவனின் வெளி அடையாளமாக இருப்பது எது?

i. கிறிஸ்தவ குடும்பம் ii. ஆலயம்
iii. பாஸ்கா விழா iv. மறைக்கல்வி

03. "மூட நம்பிக்கையிலிருந்து விலகி ஒரே இறைவனில் நம்பிக்கை வைக்க வேண்டும்" எனக் கூறும் கட்டளை,

i. 2ம் கட்டளை ii. 5ம் கட்டளை iii.1ம் கட்டளை iv. 4ம் கட்டளை

04. எபிரேய மொழியில் "சபாத்" என அழைக்கப்படுவது,

i. ஆலயம் ii. ஓய்வு நாள் iii. திருப்பலி iv. திருச்சபை

05. திருத்தந்தை பயஸ் திருவழிபாடு பற்றிக் குறிப்பிடும் சுற்றுமடல்,

i. இறை நடுநிலையாளர் ii. மிஸ்டேரியும் பீதேயி
iii. வத்திக்கான் சங்க ஏடு iv. கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூல்

06. அருளடையாளங்களின் அடித்தளமாகக் காணப்படுவது எது?

i. திருப்பலி ii. பாவ மன்னிப்பு
iii. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் iv. விசுவாசம்

07. "நேர்ச்சை" என்ற சொல்லின் பொருள் யாது?

i. சுமையை குறைத்தல் ii. சுமை தாங்குதல்
iii. சுமை சுமத்தல் iv. பாவத்திலிருந்து விடுபடல்

08. திருவழிபாடடின் அதி உன்னதமான முக்கியமான பகுதி எது?

i. காணிக்கை பவனி ii. நம்பிக்கையாளர் மன்றாட்டு
iii. செபம் iv. திருப்பலி

09. திருச்சபையின் சட்டங்களால் முறைப்படுத்தப்பட்ட திருச்சபையின் பொதுச் செபம் எவ்வாறு அழைக்கப்படும்?

i. திருப்பலி   ii. ஆராதனை   iii. திருப்புகழ்மாலை   iv. திருவழிபாடு

10 திருப்பலியின் ஆரம்பச் சடங்கு ஆரம்பிப்பது,

i. இறைவார்த்தையுடன்   ii. வருகைப் பாடலுடன்

iii. முன்னுரையுடன்   iv. மறையுரையுடன்

- **இடைவெளி நிரப்புக.**

11. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதற்கு முறைப்படி ..........................................கல்வியைப் பெற்றிருக்க வேண்டும்.
12. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே ....................................... செய்வாயாக.
13. இயேசுக் கிறிஸ்து தமது ....................................................... மூலம் மனிதனைப் பாவத்திலிருந்து மீட்டார்.
14. ........................................ என்பவரின் ஆட்சியின் போது அந்நியரின் வழிபாடுகளைச் செய்வதற்கு தாயையும் ஏழு பிள்ளைகளையும் வற்புறுத்தினான்.
15. திருச் சுரூப வணக்கத்தின் நோக்கம் அது தொடர்பான ...................................................... நினைவு கூர்தலாகும்.

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக.**

16. உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்குவதன் வெளி அடையாளம் விசுவாசிகளின் மன்றாட்டு ஆகும். (   )
17. கத்தோலிக்கராகிய நாம் மூவொரு இறைவனுக்கு மட்டுமே ஆராதனை செய்ய வேண்டும். (   )
18. எமக்கு வரும் சவால்களை வெற்றிகொள்ள மூடநம்பிக்கைகளை பின்பற்ற வேண்டும். (   )
19. திருச்சுரூபங்களுக்கு அல்லது படங்களுக்கு வணக்கம் செலுத்துவது அதனைக் குறிக்கும் புனிதருக்கு வணக்கம் செலுத்துவதாகும். (   )
20. ஞாயிறு தினத்தில் சுற்றுலாக்கள் செல்வதன் மூலம் அத்தினத்தை பரிசுத்தமாக அனுசரிக்க முடியும். (   )

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினாக்களில் விரும்பிய வினாக்கள் நான்கினைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

i. முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக எம்மை மாற்றியமைக்கும் அருளடையாளம் எது? (1 புள்ளி)

ii. தூய ஆவியின் ஞானம் எனும் கொடையினால் பெறும் தன்மை யாது? (1 புள்ளி)

iii. திருவிவிலியத்தில் மூவொரு இறைவனுக்கு மட்டுமே ஆராதனை செய்ய வேண்டும் என்பதைக் கூறும் சந்தர்ப்பம் எது? (1 புள்ளி)

iv. திருவிவிலியத்தில் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கை நாட்டில் வாழ வேண்டிய முறையைப் பற்றிக் கூறும் நூல் எது? (1 புள்ளி)

v. திருச்சுரூப வணக்கத்தின் நோக்கம் யாது? (1 புள்ளி)

vi. முழுத் திருப்பலியில் பங்குகொள்ளுதல் என்பது யாது? (1 புள்ளி)

vii. திருவழிபாடு என்பதன் ஆங்கில பதம் யாது? (1 புள்ளி)

viii. திருப்பலியின் பிரதான பிரிவுகள் இரண்டையும் எழுதுக. (1 புள்ளி)

ix. இறைவார்த்தை சடங்கிலுள்ள பதிலுரைப்பாடலானது திருவிவிலியத்தில் எந்நூலிலிருந்து வாசிக்கப்படுகிறது? (2 புள்ளிகள்)

x. நற்கருணை வழிபாட்டில் உள்ளடங்கும் விடயங்கள் 02 எழுதுக. (2 புள்ளிகள்)

02. i. மூவொரு இறைவனாகிய தந்தை, மகன், தூய ஆவியின் செயல்களை வெவ்வேறாக எழுதுக.

ii. தூய திரித்துவத்தின் மறைபொருளை சுருக்கமாக எழுதுக.

iii. மூவொரு இறைவனைப் போல் வாழ இறைவரம் வேண்டி செபம் ஒன்று எழுதுக. (12 புள்ளிகள்)

03. i. அன்றாட வாழ்வில் விலக்க வேண்டிய மூட நம்பிக்கைச் செயல்கள் மூன்று எழுதுக.

ii. சிலை வழிபாடு என்பது யாது?

iii. இறைவனுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளச் செய்ய வேண்டிய செயல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக. (12 புள்ளிகள்)

04. i. இரண்டாம், மூன்றாம் இறைகட்டளைகளை எழுதுக.

ii. இயேசு உயிர்த்து காட்சி கொடுத்த சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.

iii. ஞாயிறு தினத்தை பரிசுத்தமாக அனுசரிக்க உம்மால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் ஐந்தினை விளக்குக. (12 புள்ளிகள்)

05\. i. லா ஓஸ் (Laos), எர்கொன் (Ergon) என்ற சொற்களின் கருத்துக்களை தருக.

ii. திருப்பலியின் முக்கிய பிரிவுகள் மூன்றைக் குறிப்பிடுக.

iii. திருப்பலியில் அர்த்தமுள்ள முறையில் பங்கு கொள்வதற்கு நீர் மேற்கொள்ளக் கூடிய செயல்கள் ஐந்தினை விளக்குக. (12 புள்ளிகள்)

06\. பின்வரும் தலைப்புக்களில் சிறுகுறிப்பு எழுதுக.

i. மூன்றாம் இறைகட்டளை

ii. திருவழிபாடு (12 புள்ளிகள்)